දුරකථන
தொலைபேசி
Telephone
2698471
2698475
2698490

ෆැක්ස්
பெக்ஸ்
Fax
2693866

විද්‍යුත් තැපෑල
இணையத்தளம்
www.health.gov.lk
E-mail
postmaster@health.gov.lk

මගේ අංකය
எனது இல
My No.
DDG(MS)1/59/2018

ඔබේ අංකය
உமது இல
Your No. :

දිනය
திகதி
Date
25.05.2019

සුවසිරිපාය
சுவசிரிபாய
SUWASIRIPAYA

සෞඛ්‍ය පෝෂණ සහ දේශීය වෛද්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரப் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு
**Ministry of Health Nutrition & Indigenous Medicine**

பொது சுற்றறிக்கை இலக்கம்: 01-32/2019

சகல பிரதான செயலாளர்கள், / மாகாண சுகாதார செயலாளர்கள்,

மாகாண, பிராந்திய சுகாதார சேவை பணிப்பாளர்கள்,

போதனா வைத்தியசாலைப், மாகாண பொது வைத்தியசாலைப்,

மாவட்டப் பொது வைத்தியசாலைப் பணிப்பாளர்கள்,

ஆதார வைத்தியசாலைகளின் வைத்திய அத்தியட்சகர்கள்

நிறுவனத்தலைவர்கள்

## தேசிய விஷ தடுப்பு வாரம் 2019 ஐப்பசி 14-20

1. தேசிய விஷ தடுப்பு வாரம், இலங்கை தேசிய விஷ தகவல்கள் மையத்தினால் சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் 2007 ம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக நடாத்தப்பட்டு வரும் தேசிய சுகாதார நிகழ்ச்சித் திட்டம் ஒன்றாகும். இதனூடாக பல்வேறு விதமாக விஷமூட்டப்படுவதைத் தடுத்தல் மற்றும் விஷப் பொருட்கள் தொடர்பில் பொது மக்களுக்கும் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கும் விழிப்புணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

2. 2000 ம் ஆண்டிலிருந்து 2016 ம் ஆண்டு வரைக்கும் வெளியிடப்பட்ட தேசிய மருத்துவத் தரவுகளின் படி பீடைகொல்லிகளினால் நஞ்சூட்டப்பட்டு அரச வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் அளவு குறைவடைவதுடன் மருந்துப் பொருட்களினால் நஞ்சூட்டப்படுவோரின் அளவு அதிகரித்து வருகின்றது. இவற்றுள் 'பரசிற்றமோல்' மிகப்பிரதானமான மருந்துப்பொருளாக உள்ளது. மருந்துப் பொருட்களின் துஷ்பிரயோக பாவனை மற்றும் மருந்துப் பொருட்களுக்கு அடிமைப்பட்டிருத்தல் என்பது இலங்கையில் மிகவும் முக்கிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. இதற்காக 'டயசிபாம்', 'ரமடோல்', 'அம்பீரமைன்', 'மெதம்பீரமைன்' மற்றும் 'க.'.பீன்' போன்றவை பிரதானமாக பாவிக்கப்படுகின்றன. 'தேசிய ஆபத்தான மருந்துகள் கட்டுப்படுத்தல் சபைக்கு' வழங்கப்பட்ட தரவுகளுக்கமைய 2017 ம் ஆண்டில் 2706 மருந்துகளுக்கு அடிமைப்பட்ட நபர்கள் சிகிச்சையளிக்கப்பட்டும் புனருத்தாரணம் செய்யப்பட்டும் உள்ளார்கள். இது 2016 ம் ஆண்டின் தரவுகளுடன் ஒப்பிடும்போது 15% அதிகரிப்பை காட்டுகின்றது.

3. இது தொடர்பில் பொது மக்களுக்கு அறிவியல் சார்ந்த அறிவினை வழங்கும் முகமாக இலங்கை தேசிய விஷ தகவல்கள் மையம் ''மருந்துகளின் துஷ்பிரயோகம் மற்றும் போதை மருந்துகளின் பாவனையைத் தடுத்தல்'' என்ற தொனிப்பொருளில் தேசிய விஷ தடுப்பு வாரத்தை ஒருங்கிணைத்து நடாத்துவதற்கு தீர்மானித்துள்ளது.

4. இச்சுற்றறிக்கை மருந்துகளின் துஷ்பிரயோகம் மற்றும் போதை மருந்துகளின் பாவனை பற்றிய அறிவை சுகாதார அலுவலகளுக்கும் பொது மக்களுக்கும் இந்நாட்டின் சுகாதார நிறுவனங்களினால் நடாத்தப்படும் செயற்பாடுகளின் மூலம் பரப்பும் நோக்கில் பிரசுரிக்கப்படுகின்றது.

**காலம் : 2019 ஐப்பசி 14-20 ம் திகதி**
**தொனிப்பொருள்: மருந்துகளின் துஷ்பிரயோகம் மற்றும் போதை மருந்துகளின் பாவனையைத் தடுத்தல்**
**நோக்கம்: மருந்துகளின் துஷ்பிரயோகத்தை குறைத்தல் மற்றும் போதை மருந்துகளின் பாவனையைத் தடுத்தல்**

5. **தேசிய விஷ தடுப்பு வாரத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகள்**

1. நிறுவனங்கள், பொது மக்கள் மற்றும் ஊழியர் மட்டங்களில் விழிப்புணர்வு ஊட்டும் செயற்திட்டங்களில் ஒன்றைத் தயாரித்தல். உதாரணமாக சுகாதார கல்விசார் விரிவுரைகள், கண்காட்சிகள், மற்றும் சுவரொட்டிகளை ஒட்டுவதற்கு ஏற்பாடு செய்தல்.
2. சுற்றறிக்கைக்கு அமைவாக பொது மக்களுக்கு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்தல்.
3. விஷ தடுப்பு வாரத்தில் சகல நிறுவனங்களிலும் பொருத்தமான பதாகைகள் காட்சிப்படுத்தல் வேண்டும்.

- இது தொடர்பில் சுகாதார மருத்துவ அதிகாரி மாவட்ட பொது வைத்தியசாலை மற்றும் போதனா வைத்தியசாலை மட்டத்தில் ஆகக் குறைந்தது ஒரு நிகழ்ச்சித் திட்டத்தையாவது நடாத்துதல் வேண்டும்.
- இந்த தேசிய நிகழ்ச்சித் திட்டம் இலங்கை தேசிய வைத்தியசாலையில் உள்ள தேசிய விஷ தகவல்கள் மையத்தினால் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளதுடன் மேலதிக தகவல்கள் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனை என்பவற்றைப் பெற்றுக் கொள்ள தொலைபேசி இலக்கம் 0112686143, 0112691111 நீடிப்பு இலக்கம் 2430 மற்றும் மின்னஞ்சல் முகவரி infotoxlanka@gmail.com என்பவற்றின் ஊடாக தொடர்பினை ஏற்படுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.
- இலங்கை தேசிய விஷ தகவல்கள் மையத்தின் இணையத்தளமான http://www.toxbaselanka.info இன் ஊடாக இந்த தொனிப்பொருளுக்குரிய தகவல்களை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்
- இந்த சுற்றறிக்கையை சகல ஊழியர்களுக்கும் தெரியப்படுத்துவதுடன், இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்து கொள்ளும் படியும் வேண்டப்படுகின்றீர்கள்.

6. தேசிய விஷத் தடுப்பு வாரம் தொடர்பில் உமது நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சுருக்க அறிக்கை ஒன்று அத்தகைய செயற்பாடுகள் முடிவடைந்த பின்னர் சுகாதார கல்வி அதிகாரியினூடாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப்பிரிவின் பணிப்பாளருக்கும் மற்றும் தேசிய விஷத் தகவல் மையத்திற்கும் 2019 கார்த்திகை 30ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

செயலாளர்
சுகாதார, போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு